6th August 1966]

கனம் திரு. வெ. ராமையா : கிட்டத்தட்ட 250 குடும்பங்கள் போக முடியும். இப்பொழுது அவர்கள் போனவுடனே ஒரு தீவில் மராமத்து வேலைகள் நடக்கின்றன, அதிலே எடுத்துக் கொள்ள முடியும். அதன் பிறகு அவர்களுக்கு நிலமும் கொடுக்கிறார்கள். பின்னால் ரப்பர் ப்ளாண்டேஷன் வேலையும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. உடனடியாக ஆறுமாதத்திற்கு அவர்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்கள் கொடுக்கிறார்கள்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : பர்மா அகதிகளுக்கு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்துப் பழக்கம் கிடையாது. நெல் விவசாயம் செய்துதான் பழக்கம், பர்மாவிலிருந்து வந்திருக்கும் அகதிகளுக்கு. பர்மா அகதிகள், சிலோனிலிருந்து வருகிறவர்கள் போல அல்ல. ஆகவே, ஒவ்வொருவருக்கும் தகுந்த அளவுக்கு நிலம் ஒதுக்கிக் கொடுத்து விவசாயம் செய்ய ஏற்பாடு இருக்கிறதா மத்திய சர்க்கார் கொள்கையில் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : மத்திய சர்க்கார் விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்கள் தேவை என்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால் சிலர் ரப்பர் தோட்டத்திலும் வேலை செய்யலாம். அப்படிச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், பர்மா தமிழர்கள் போல, இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களுக்கும் இப்படி தீவுகளுக்குச் செல்ல வேண்டும் என்றால் வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதையும் மத்திய சர்க்கார் பரிசீலனை செய்கிறது.

வாரச் சந்தைகள்

*189 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் வாரச் சந்தைகளை, பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்று நடத்த வழிவகை செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அரசினரிடம் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. எந்த ஊராட்சி ஒன்றிப்பு மன்றமாவது தனியார் வாரச் சந்தைகளை எடுத்து நடத்த உத்தேசித்துள்ளதா என்ற தகவல் சேகரிக்கப்படுகிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, தற்போது ஜமீன் இனும் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. பற்றுக்குறையான வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருமானம் வர வழியாக இருக்கும் என்று இந்த யோசனையைச் சொன்னேன். கனம் அமைச்சர் 'இல்லை' என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையில் அவர்களுடைய வருமானத்தில் 15 சத விகிதம் வரியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. சரியான கணக்குக் கொடுக்காததால், வரி

வசூல் சிரமமாக இருக்கிறது. ஆகவே, சந்தைகளை ஏலம் விட்டு 15 சத விகிதம் லைசென்ஸ் தொகையைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்துக் கூட்டுமன்றங் களுக்கு வருமானம் வரவேண்டும் என்று சொல்லியிருக்கும் யோசனை நல்லதுதான். ஆனால், தனியார் நடத்தும் சந்தைகளை மாற்றப் போனால், வழக்கு மன்றங்களில் வழக்கு போட்டு, அப்படிப் பல கேசுகள் இருப்பதும், சிக்கல் இருப்பதும் தெரியும். அம்மாதிரி பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் வாரச் சந்தைகளை எடுத்து நடத்து கிறோம் என்று தீர்மானம் போட்டு ஜில்லா கலெக்டருக்கு அனுப்பினால், எந்த அளவு நில ஆர்ஜிதம் செய்து, அந்த உரிமையைக் கொடுக்கலாம் என்று பரிசீலனை செய்து கூடுமான வரை உதவி செய்ய முயற்சி செய்யலாம்.

பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர்கள்

* 190 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர் கள் எவருக்காவது அண்மையில் சிறைதண்டனை கொடுக்கப் பட்டதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. பி. முருகையன் : சார், சில பஞ்சாயத்துக் கூட்டுமன்றங் களிலே, ஒரு சில கூட்டுமன்றத் தலைவர்களுக்கு கோர்ட்டிலே தண்டனை விதிக்கப்பட்டிருந்தும், தண்டனை பெற்றவர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்று சட்ட விதிகள் இருந்தும் தொடர்ந்து தலைவராக இருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்? அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லுகிறார்களே, அது எப்படி என்று அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கேள்வியில் "அண்மையில்" என்றிருந்ததால், 'இல்லை' என்று பதிலளித்தேன். அப்படி தண்டனை அடைந்தவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது பதவியில் இல்லை. ஆனால், அம்மாதிரி தண்டனை பெற்றவர்கள் பதவியில் இருக்கக் கூடாது என்று தடை இல்லை. அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன, அங்கத்தினருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பஞ்சாயத்தில் பதவி வகிப்பவர்கள், பஞ்சாயத்தில் ஊழல்கள் செய்தார்கள் என்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றால், பதவியிலிருந்து நீக்கப்படு கிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில் தண்டனை அடைந்திருந் தால் பதவியில் நீடித்து வைக்காமல் இருக்க ஏதாவது வழிவகை இருக்கிறதா?